செய்திவெளியீடு நாள் : 06.02.2024

**கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் அரசு போக்குவரத்துக் கழக (SETC & TNSTC) பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டு என்னும் தலைப்பில் பேருந்து முனையத்தை சுத்தமாகவும், உடலை ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதற்கான மூன்று நாள் விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது.**

********

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பேருந்து நிலையங்களுள் ஒன்றான **"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை"** மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** 30.12.2023 அன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அரசு தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி இன்று (06.02.2024) கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA) மற்றும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் (CUMTA) இணைந்து தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய அரசு போக்குவரத்துக் கழக (SETC & TNSTC) பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டு என்னும் தலைப்பில் பேருந்து முனையத்தை சுத்தமாகவும், உடலை ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதற்கான மூன்று நாள் விழிப்புணர்வு பயிற்சி இன்று (06.02.2024) முதல் தொடங்கியது. முதல் நாளான இன்று சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள் தொடங்கி வைத்து, இப்பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் நடத்துனர்கள் மற்றும் ஓட்டுநர்கள் எவ்வாறு பேருந்து முனையத்தை பயன்படுத்துவது குறித்து சிறப்புரையாற்றினார்.

Verified @ RealEstate™

இப்பயிற்சியில், வாழ்வியல் பயிற்சி கருத்தாளர் திரு.பாஸ்கர் அவர்களால் ஆரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஓட்டுநர்களும் நடத்துனர்களும் மகிழ்ச்சிகரமாக இந்த பயிற்சியில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களை கூறி மகிழ்ந்தனர். பேருந்து முனைய சுற்றுப்புறத்தை தூய்மையாகவும், அவர்கள் தங்கும் இடத்தை சுத்தமாகவும் பயன்படுத்துவதாக உறுதியளித்தனர்.

அதன் பின்னர் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழும (CUMTA) குழு அனைவரையும் பேருந்து முனையத்தில் உள்ள வசதிகளை அறிந்து கொள்வதற்காக பேருந்து முனையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு எங்கெங்கே என்ன என்ன வசதிகள் உள்ளன என்பதை நேரடியாக காண்பித்து, அதன் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்து கூறப்பட்டது. அதன் பின்பு அனைவருக்கும் காவேரி மருத்துவமனை மூலம் மருத்துவ பரிசோதனை செய்து அவர்களுடைய உடல்நலத்தை பற்றி மருத்துவர்கள் மூலம் விளக்கம் கொடுக்கப்பட்டது.

இந்த பயிற்சி மூன்று நாட்கள் நடத்துவதற்கும் ஒவ்வொரு நாட்களும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் அவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் காலையிலும், மாலையிலும் இரண்டு குழுக்களாக பயிற்சி கொடுக்கப்பட்டது. இன்று காலையில் நடந்த பயிற்சியில் 26 நடத்துனர்கள் மற்றும் ஓட்டுநர்களும், மாலையில் நடந்த பயிற்சியில் 28 நடத்துனர்கள் மற்றும் ஓட்டுநர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

மேலும் இந்த பயிற்சியானது மூன்று நாட்களுக்கு மாதிரி பயிற்சியாக கொடுக்கப்பட்டு, தொடர்ந்து அனைத்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு, பேருந்து முனையத்திலுள்ள சிறப்பு அம்சங்கள் பற்றிய கையேடும் பயிற்சியும், நினைவு பரிசு வழங்கப்பட்டது. நிறைவாக, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களும் இப்பயிற்சி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், பயிற்சி ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து, தொடர்ந்து தங்களுக்கு இத்தகைய பயிற்சிகள் அளிக்கவேண்டுமெனவும் கேட்டு கொண்டனர்.

Verified RealEstate™